**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண். 68/2007**
**நாள் 02/04/2025 புதன்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பின் 2–வது சாட்சியின் வாக்குமூலம் 1878 ம் ஆண்டில் 10–வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – நாராயணமூர்த்தி | த/பெயர் – சீனிவாசலு நாயுடு |
| வயது – 62 | தொழில் – ஒப்பந்த தொழில் |
| விலாசம் – ஜி.என்.டி சாலை, கும்மிடிப்பூண்டி | |

**முதல் விசாரணை–**

நான் இந்த வழக்கின் 4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியாவேன். எனது சாட்சியத்தை நிரூபணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. வாதி மற்றும் 1 முதல் 3, 5 பிரதிவாதிகள் எனது சகோதர சகோதரிகள் என்றால் சரிதான். 6 ம் பிரதிவாதி எனது மனைவி ஆவார். அவர் எனது பெரிய சகோதரியின் மகள் ஆவார். வழக்கு சொத்துக்கள் அனைத்தும் எனது தந்தை சீனிவாசலு நாயுடுக்கு தான் சொந்தம் என்றால் சரிதான். எனது தந்தை 27.05.2004 அன்று இறந்தார். அவர் இறப்பிற்கு பிறகு நாளைய தேதிவரை வழக்கு சொத்துக்கள் கூட்டு குடும்ப சொத்துக்களாக எங்களால் அனுபவம் செய்யப்பட்டு வருகிறது என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் கும்மிடிப்பூண்டி ஜி.என்.டி சாலை, தேர்வழி கிராமம், பெரிய சோழியம்பாக்கம், சின்ன சோழியம்பாக்கம், ஆத்துப்பாகம், ஏனாதிமேல் பாக்கம், பீப்பாஞ்சியம்மன் கோயில் ஆகிய இடங்களில் அமைந்துள்ளது. வாதி பாகம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. வழக்கு சொத்தில் வாதிக்கு 1/7 பாக உாிமை உள்ளது என்றால் சரிதான். மேற்படி வாதி அவருக்கு சொந்தமான 109 கிராம் நகைகளை நான் மற்றும் எனது சகோதரர்கள் மற்றும் எனது தந்தையிடம் கொடுத்தார் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் 1ம் பிரதிவாதியால் மேற்படி நகை கொடுக்கும் போது எழுதப்பட்டது. மேற்படி நகை கொடுக்கும் போது சகோதரர்கள் நாங்கள் நான்கு நபர்களும் கையொப்பம் செய்து கொடுத்தோம். மேற்படி ஆவணத்தில் 4வது கையொப்பம் என்னுடையது அதில் உள்ள மற்ற கையொப்பம் எனது சகோதரர்களுடையது. மேற்படி நகையை எனது தந்தையிடம் கொடுக்கும் போது நாங்கள் நான்கு பேர் மற்றும் எனது மனைவி, எனது சகோதரி குணசுந்தரி, வசந்தா ஆகியோர் இருந்தனர். மேற்படி ஆவணம் வா.த.சா ஆ 16 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. எனது தந்தை இறப்பிற்கு பிறகு மேற்படி நகைகள் எனது சகோதரர் கஜபதியிடம் உள்ளது என்றால் சரிதான். எனது தந்தை இறந்த பிறகு மேற்படி நகைகளை திருப்பி தர கூறி எனது சகோதரி வசந்தா எங்கள் நான்கு நபர்மீதும் காவல் நிலையத்தில் புகாா் கொடுத்தார். இன்றைய தேதியில் மேற்படி நகை கஜபதியிடம் உள்ளது. இன்றைய தேதிவரை வழக்கு சொத்துக்கள் கூட்டு குடும்ப சொத்துக்களாக அனுபவம் செய்யப்பட்டு வருகிறது என்றும் அதில் இருந்து வரும் வாடகையை வாதிக்கு கொடுக்கவில்லை என்றும் கூறினால் சரிதான். கும்மிடிப்பூண்டி ஜி.என்.டி சாலையில் எனது தந்தைக்கு சொந்தமான சொத்தில் 1ம் பிரதிவாதி ஹரிகிருஷ்ணன் கீழே 2 கடைகள் முதல் தளத்தில் 2 கடைகள் அதற்கு மேலே இரண்டு வீடுகளை எனது தந்தை பணம் கொடுத்ததன் பெயரில் கட்டி அனுபவம் செய்து வருகிறார்.

4. கும்மிடிப்பூண்டி ஜி.என்.டி சாலையில் எனது தந்தைக்கு சொந்தமான சொத்தில் 2ம் பிரதிவாதி கஜபதிக்கு கீழே 2 கடைகள் மற்றும் ஒரு வீடும் முதல் தளத்தில் 2 கடைகள் அதற்கு மேலே ஒரு வீடும் உள்ளது ஒரு வீட்டில் அவர் தங்கியும் மற்றொரு வீட்டினை வாடகைக்கு விட்டுள்ளார். நானும் 3ம் பிரதிவாதியும் எனது தந்தைக்கு சொந்தமான சொத்தில் தான் குடியிருந்து வருகிறோம். வாதி வசந்தா சுயமாக அவருடைய சம்பாத்தியத்தில் கிரையம் பெற்ற இடத்தில் தான் வீடு கட்டி வசித்து வருகிறார் என்றால் சரிதான். அவர் பாதி பணமும் எனது தந்தை பாதி பணமும் மேற்படி இடத்தை வாங்க கொடுத்தார். நான் கூறுவது தவறு என்றும் வாதி அவர் சுயமாக சம்பாதித்த பணத்தை கொடுத்தான் மேற்படி இடத்தை வாங்கினார் என்றும் எனது தந்தை பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கான பட்டா இன்றை தேதிவரை எனது தந்தை பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் எனது தந்தைக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும் அவர் விருப்ப உறுதி ஆவணம் எதுவும் எழுதிவைக்காமல் இறந்துவிட்டதால் அவருடைய சட்டப்படியான வாரீசுதாரர் என்ற முறையில் வாதிக்கும் மேற்படி சொத்துக்களில் 1/7 பாகம் பெற உாிமை உள்ளது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**